## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## O.S. No.228 /2022

### 06.02.2025

### D.W.1- வீரணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதி, பிரதிவாதிகளுக்கு இடையேயுள்ள உறவுமுறை சரிதான். வாதி, பிரதிவாதிகளை தவிர்த்து என் தகப்பனார் பொன்னையாத்தேவரக்கு பிறந்த இரணடு மகன்கள் ஜெயபாண்டி மற்றும் பால்பாண்டி ஆகியோர்கள் வாரிசுகள் ஏதுமின்றி காலமானார்கள் என்றால் சரிதான். வழக்கில் 3 அட்டவணை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ செட்டியூல் சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி செட்டியூல் சொத்துக்கள் எனது தாயார் கருத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சி செட்டியூல் சொத்துக்கள் எனது பெற்றோர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் எனக்கு எனது பெற்றோர்களால் தானமாக கொடுக்கப்பட்டது. எனது பெற்றோர்கள் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை வாதியுடன் கூட்டாக அனுபவம் செய்தேன் என்றால் சரியல்ல, நான் மட்டும் தான் அனுபவம் செய்தேன். தாவா சொத்துக்களை பொருத்து என் பெற்றோர்கள் எனக்கு ஆவணங்கள் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வாய்கரலாக கொடுத்தார்கள். எனது பெற்றோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனக்கு எழுதி வைக்காத காரணத்தினால் வாதிக்கு பாகம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது தாயார் 2022ல் இறந்துவிட்டார். எனது தாயார் இறப்பிற்கு பின்பு வாதி தாவா சொத்தில் பாகம் கேட்டார் என்றால் தாயார் இறந்த ஒரு வருடம் கழித்து கேட்டார். வாதி வழக்கு சொத்தில் பாகம் கேட்டு நோட்டீஸ் அனுப்பினாரா என்றால் இல்லை. நோட்டீசை நான வாங்க மறுத்ததாக வா.சா.ஆ.6 ஆவணம் காணப்படுகிறது என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் தான் மேற்படி அறிவிப்பை தெரிந்து கொண்டேன். எனது தாயார் இறப்பிற்கு பின்பு வழக்கு சொத்துக்களின் ஆவணங்களை நான் எடுத்து சென்றதாக வாதி பிரச்சினை செய்தார் என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் வழக்கிடை சொத்துக்களை பொருத்து எனது பெற்றோர்கள் பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 அடமான ஆவணம் வழக்கிடை சொத்துக்களை என் பெயரில் வைத்துள்ளேன். 2009ல் வாதியின் சொத்தை அபகரிக்க ஆவணங்கள் பொய்யாக உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்துகளை பொருத்து வருவாய்துறை ஆவணங்கள் என் பெயரில் மாற்றம் செய்வதற்கு வாதியையோ, 2ம் பிரதிவாதியையோ விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களை முறையான விசாரணையின்று என் பெயரில் மாற்றம் செய்து கொண்டதால் மேற்படி வருவாய் ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதனால் வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 செல் ரசீது நான் தனிப்பட்டி முறையில் தாவா சொத்தை அடமானம் வைப்பதால், நான் தான் திருப்ப வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.